# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SPECIAL COURT TO DEAL WITH THE CASES OF OFFENCES IN CONTRAVENTION OF THE PROVISIONS OF THE MINES AND MINERALS (D&R) ACT, 1957, MADURAI**

**************

| | | |
|---|---|---|
| Case No | : | Spl.C.C.No.123/2021 |
| Deposition of witness | : | DW1 |
| Name | : | திரு.முகமது பாசில் |
| Father's Name | : | (லேட்) காதர் மொய்தீன் |
| Village | : | மதுரை |
| Taluk | : | மதுரை |
| Calling | : | |
| Age | : | 62 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2026 | | |

எதிரிகள் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி தொடங்கிய நேரம் : 11.31 AM

**புகார்தாரார்/ அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் 30 ஆண்டுகளாக ஜெம் கிரானைட்ஸ்ல் பணிபுரிந்தேன் , தற்போதும் பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். மதுரை மாவட்ட இடையபட்டி கிராமத்தில் புல எண்.58/3 ல் 0.11.0 ெஹக்டேர்ஸ் நன்செய் நிலமும், புல எண்.59/4C ல் 0.07.0

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.06.12 16:30:59 +0530

ெஹக்டேர் நன்செய் நிலமும் ஆகியவற்றின் பட்டா ஜெம் கிரானைட்ஸ் பெயரில் தான் இன்றைய தினமும் உள்ளது என்றால் சரிதான் . இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆர். வீரமணி, எஸ். ஆர். ஆசைதம்பி, ஆர். சேகர், எஸ்.ஆர். குமார் ஆகியோர் சகோதரர்கள் என்றால் சரிதான் . ஜெம் கிரானைட்ஸ் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட 2 முதல் 5 வரையானவர்களின் அனுபவத்தில் தான் அந்த நிலம் இன்றைய தினம் வரை இருக்கிறது என்றால் ஜெம் கிரானைட்ஸ் கம்பெனியில் அனுபவத்தில் இருக்கிறது . ஜெம் கிரானைட்ஸ் , கோரமண்டல் ஏஜென்சீஸ் , கேலக்ஸி எண்டர்பிரைசஸ் மூன்றும் ஒரே குழுமத்தை சேர்ந்தது என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் , ஆனால் அவை தனித்தனி கம்பெனி . அவற்றின் நிர்வாகம் பார்த்தது எஸ் . ஆர். ஆசைத்தம்பி. ஜெம் கிரானைட்ஸ்க்கு சொந்தமான பட்டா நிலத்தில் 129 கிரானைட் கற்துண்டங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த இடம் எங்குள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . இந்த இடம் மதுரை மாவட்டம் , இடையபட்டி கிராமத்தில் இருக்கிறது. இந்த இடத்தினை எத்தனை மாதத்திற்கு ஒரு முறை சென்று பார்த்து வருவேன் என்றால் ஆறு மாதத்திற்கு ஒரு முறை பார்த்து வருவேன். கடைசியாக எப்போது அந்த இடத்தை சென்று பார்த்தேன் என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு பார்த்தேன் . அந்த கிரானைட் கற்துண்டங்கள் அங்கு தான் இருந்தன. அந்த கற்துண்டங்கள் அந்த இடத்தில் இருப்பதாக உரிமையாளருக்கு

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.06.12 16:31:13 +0530

தகவல் சொன்னேனா என்றால் இல்லை. அதில் எத்தனை கற்கள் இருந்தது என்று எண்ணினேனா என்றால் இல்லை. அவற்றில் 129 கிரானைட் கற்துண்டங்கள் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த 129 கிரானைட் கற்துண்டங்கள் அரசின் அனுமதியில்லாமல் விதிமீறலாக இடையபட்டி கிராம எண் .58/3, 59/4C ஆகிய இடங்களில் அடுக்கப்பட்டிருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு அரசின் அனுமதி பெறாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது சட்டவிரோதமான நடவடிக்கை என்றால் அது எனக்கு தெரியாது . அந்த கற்கள் ஜெம் கிரானைட்ஸ் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட 2 முதல் 5 வரையானவர்களின் கற்கள் என்றால் இல்லை. அந்த கற்கள் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . அந்த கற்களை அரசு அதிகாரிகள் கைப்பற்றி நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . அரசு அந்த கற்களை கைப்பற்றி நடைபெறும் வழக்கில் தான் நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான் . இந்த கற்கள் ஜெம் கிரானைட்ஸ் மற்றும் 2 முதல் 5 எதிரிகளின் சொந்தமான கற்கள் என்றும், அவர்கள் அரசு அனுமதி பெறாததால் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும், அவர்களின் சம்மதத்தோடு தான் அந்த கற்கள் மேற்படி புலங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று ம் சொன்னால் சரியல்ல. நான் ஜெம் கிரானைட்ஸ் மற்றும் 2 முதல் 5 எதிரியானவர்களிடம் பணிபுரிவதால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன்

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.06.12 16:31:18 +0530

என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

சேலத்தில் ஜெம் கிரானைட்ஸ்க்கு கிளை அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். அதனை திரு. எஸ். ஆர். ஆசைதம்பி தான் நிர்வாகிக்கிறார் என்றால் சரிதான். தமிழ்நாட்டில் உள்ள ஜெம் கிரானைட்ஸ் மற்றும் கோரமண்டல் , கேலக்கி ஆகிய நிறுவனங்களுக்கு சொந்தமான குவாரிகளும், Factory களும், நிலங்களும் சேலத்தில் உள்ள ஜெம் கிரானைட்ஸ் கிளை அலுவலகத்தின் கீழ் தான் உள்ளது என்றால் சரிதான் . மதுரையில் உள்ள அனைத்து இடங்களும் , குவாரிகளும், சேலத்தில் உள்ள ஜெம் கிரானைட்ஸ்ன் கிளை அலுவலகத்தின் மூலமாக திரு . எஸ்.ஆர்.ஆசைத்தம்பிதான் நிர்வாகிக்கிறார் என்றால் சரிதான் . மதுரையில் ஜெம் கிரானைட்ஸ் அலுவலகம் உள்ளதா என்றால் இல்லை . மதுரையில் ஜெம் கிரானைட்ஸ்க்கு ஒரு Currect Account No.4251 ஆனது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மதுரை மெயின் கிளையில் வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான் . அதனை திரு. எஸ். ஆர். ஆசைத்தம்பி மட்டும் தான் அந்த வங்கி கணக்கிற்கு signing authority என்றால் சரிதான் . மற்ற நபர்களான திரு.வீரமணி, திரு.சேகர், திரு.குமார் ஆகியோருக்கு அந்த வங்கி கணக்கை பராமரிப்பதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் மதுரையில் உள்ள செலவுகளுக்கு அவர் self cheque மூலம் கையெழுத்திட்டு கொடுப்பார், அதன் மூலம் நாங்கள் செலவுகளை

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.06.12 16:31:23 +0530

மேற்கொள்வோம் என்றால் சரிதான் . காஷ்மீர் ஒயிட் என்ற கிரானைட் என்பது கீழவளவு கிராமத்தில் உள்ள கோரமண்டல் ஏஜென்சீஸ் என்ற நிறுவனத்திற்கு சொந்தமான குவாரியின் கற்கள் என்றால் சரிதான் . கீழவளவு கிராமத்தில் உள்ள கோரமண்டல் ஏஜென்சீஸ் குவாரியை நிர்வகித்ததும் எஸ் . ஆர். ஆசைத்தம்பி தான் என்றால் சரிதான் . நான் சீனியரேஸ் பீஸ் தேவைக்காக எஸ் .ஆர். ஆசைத்தம்பி, சென்னை மற்றும் சேலத்தில் உள்ள சரவணன் , கிளை மேலாளர் , சேலம், ஜெம் கிரானைட்ஸ் அலுவலகம் என்பவர்களுக்குத்தான் கடிதம் எழுதினேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் தான் மேற்படி வேண்டுகோள்களின் நகல்கள் ஆகும் . மேற்படி ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல்கள் என்பதால் அரசு தரப்பின் ஆட்சேபனைக்குட்பட்டு **Ex.D.2 series** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நான் சொன்ன கடிதங்களையோ , மற்ற ஆவணங்களையோ நான் வீரமணிக்கோ , குமாருக்கோ, சேகருக்கோ எழுதமாட்டேன் என்றால் சரிதான் . அதுபோல் மதுரையில் இருந்து ஜெம் கிரானைட்ஸ், கோரமண்டல், கேலக்ஸி நிறுவனங்களின் கிரானைட் துண்டங்களை விற்பதற்கோ, வேறு இடங்களுக்கு அனுப்புவதற்கோ திரு . எஸ்.ஆர். ஆசைத்தம்பிதான் முடிவெடுப்பார் என்றால் சரிதான் . அதுபோல் 28.02.2008 தேதியிட்ட என் கடிதத்தில் திரு .ஆசைத்தம்பி, கோரமண்டல் ஏஜென்சீஸ்க்கு சொந்தமான கற்துண்டங்களை (100 cbm) Stockyard க்கு அனுப்புமாறு

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.06.12 16:31:29 +0530

உத்தரவிட்டுள்ளார் என்றால் சரிதான் . மேற்படி ஆவணம் ஜெராக்ஸ் நகல் என்ற அரசு தரப்பின் ஆட்சேபனையுடன் **Ex.D.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது . மதுரையில் குவாரி சம்பந்தமாகவோ , கிரானைட் தொழில் சம்பந்தமாகவோ ஆட்களை நியமிப்பது சம்பந்தமாகவோ , அனைத்து தினசரி பணிகள் மற்றும் நிர்வாக பணிகள் அனைத்தையும் திரு . ஆசைத்தம்பி தான் பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஜெம் கிரானைட்ஸ் குவாரி சர்வே எண்.78/3, 78/11 மதுரை மாவட்டம் , இடையபட்டி கிராமத்தில் உள்ள குவாரிக்கு தாக்கல் செய்த Mining plan ஆகும் என்றால் சரிதான். அதில் declaration of the lease எனும் கடிதத்தில் திரு.எஸ்.ஆர். ஆசைத்தம்பிதான் கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த Mining plan ன் அசல் ஆவணம் இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள Spl.C.C.No.128/2021 வழக்கில் Ex.D.2 ஆக 02.03.2024 அன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் , அதன் நகல் தான் என்னிடம் காண்பிக்கப்படுகிறது என்றும் சொன்னால் குறியீடு செய்தது எனக்குதெரியாது , ஆனால் அது Mining plan ன் நகல் தான் . சரிபார்ப்புக்குட்பட்டு அது அரசு தரப்பின் ஆட்சேபனையுடன் **Ex.D.4** ஆக குறியீட செய்யப்படுகிறது. இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்ட 129 கிரானைட் கற்துண்டங்கள் இடையபட்டி கிராம சர்வே எண் .58/3, 59/4C ஆகிய நிலங்களில் அடுக்கி வைக்கப்பட்டதை பற்றி திரு . வீரமணி என்பவருக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். அதுபோல திரு.வீரமணி அவர்கள் மற்ற யாருக்கும் கற்கள் அடுக்கி

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.06.12 16:31:35 +0530

வைப்பதற்கு அனுமதி அளிக்கவில்லை என்றால் சரிதான் . இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்ட 129 கிரானைட் கற்துண்டங்களும் பி .ஆர்.பி நிறுவனத்தின் பங்குதாரரான திரு. சுரேஷ் என்பவர் இந்த வழக்கில் இந்த கற்கள் தங்களுக்கு சொந்தமானது என்று ஒரு claim petition தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். திரு.வீரமணி அவர்கள் மதுரையில் உள்ள ஜெம் கிரானைட்ஸ்ன் நிர்வாகம் மற்றும் தினசரி பணிகளில் ஈடுபடவில்லை என்றால் சரிதான்.

**எதிரிகள் 1,3 முதல் 5 தரப்பில் மறு விசாரணை :**

என்னிடம் காண்பிக்கப்படும் Ex.D.2, Ex.D.3, Ex.D4 ஆவணங்கள் வீரமணி என்பவருக்கு நான் அனுப்பவில்லை என்றால் சரிதான் . இந்த ஆவணங்கள் அனைத்தும் வீரமணியின் வழக்கறிஞர் காண்பித்ததை தான் நான் ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான் . நான் ஜெம் கிரானைட்ஸ் , சென்னைக்கு அனுப்பிய கடிதங்கள் வீரமணி என்பவருக்கு எவ்வாறு கிடைத்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் . ஜெம் கிரானைட்ஸ் , கோரமண்டல் ஏஜென்சீஸ் , கேலக்ஸி ஆகியவைக்கு Chairperson வீரமணி என்பவர்தான் என்றும் அதனால் அவருக்கு அனைத்து ஆவணங்களின் நகல்களும் அனுப்பி வைக்கப்படும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மதுரை அண்ணாநகர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில்

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.06.12 16:31:40 +0530

உள்ள Current Account ஆனது ஜெம் கிரானைட்ஸ் பெயரில் உள்ள Partnership Account என்றால் சரிதான் . அது போன்று ஜெம் கிரானைட்ஸ் Account ஐ எஸ்.ஆர்.ஆசைத்தம்பி ஜெம் கிரானைட்ஸ்க்காக பரிவர்த்தனை செய்ய வீரமணி , சேகர், குமார் ஆகிய மூவரும் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்களா என்றால் அது எனக்கு தெரியாது. நான் மேற்படி மூன்று நிறுவனங்களுக்கும் Chairperson இந்த வழக்கின் 2 வது எதிரி என்பதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி முடிவடைந்த நேரம் : 12.30 PM

(ஒம்./-)******

சாட்சியால் திறந்த மன்றத்தில் சாட்சியமளிக்கப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.06.12 16:31:46 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான
குற்ற வழக்குகள் தனி சிறப்பு நீதிமன்றம்,
மதுரை.